# ஓசை எழுப்பும் வண்டிகள்



## உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.WorldTamilAcademy.com

அறிவே வளம்

# ஓசை எழுப்பும் வண்டிகள்

அன்று விடுமுறை நாள். தாத்தாவின் வீட்டிற்குச் செல்ல மாமாவுடன் நடந்து சென்றான் சின்னஞ்சிறு பாலா. அவனது பயணம் சாதாரணமானது இல்லை, அது ஒரு ஓசை நிறைந்த சாகசப் பயணமாக இருக்கப் போகிறது.



பாலா முதலில் ஒரு பெரிய திறந்தவெளி வயல்வெளியைக் கடந்தான். அங்கே அவனுக்காகக் காத்திருந்தது மாட்டு வண்டி. மரச்சக்கரங்கள் பூட்டப்பட்ட அந்த வண்டியில் ஏறி அமர்ந்தான். காளைகள் மெதுவாக நடக்கத் தொடங்கின.



வண்டியின் சக்கரங்கள் தரையில் ஓடியபோது எழுந்த "கட கடவென ஓசைகேட்டு பாலா தலையாட்டிச் சிரித்தான். மாட்டு வண்டியிலிருந்து இறங்கியதும் மாட்டு வண்டியைச் சுற்றி சுற்றி வந்தான். மாடுகளைத் தொட்டுப் பார்த்தான்.



பின் இருவரும் கம்பீரமாகக் காத்திருந்த குதிரை வண்டியில் ஏறினார்கள். குதிரை வண்டி வேகமாக ஓட ஆரம்பித்தது. குதிரையின் கால்கள் சாலையில் ஓடியபோது டக் டக் என எழுந்த ஓசை அவனுக்கு குதுகலத்தைத் தந்தது.



பாலா குதிரைக்காரரிடம் "குதிரை வண்டி என்னை வேகமாக டக் டக் என கூட்டிச் செல்கிறது!" என்று கூறினான். மாமா சிரித்தார். குதிரைகளின் கனைப்பொலி வித்தியாசமாக இருந்தது. மேலும் குதித்துக் குதித்து செல்வது போல இருந்தது. டக் என எழுந்த ஓசை அவனுக்கு குதுகலத்தைத் தந்தது.



குதிரை வண்டியிலிருந்து இறங்கியதும் மாமா குதிரைக்காரரிடம் பணம் கொடுத்தார்.



பின் இருவரும் சிறிது தூரம் நடந்து, மாமா ஏற்கனவே அங்கே நிறுத்தி வைத்திருந்த மோட்டார் வண்டியில் ஏறினர். இதுதான் அவனது மூன்றாவது சவாரி.
"டுப் டுப் டுபு டுபு வென!" – வண்டியின் எஞ்சின் ஒலி எழுப்பியது. பாலா முன்புறம் அமர்ந்து கொண்டான்.



மாமா ஹாரன் அழுத்துவதைப் பார்த்து அவனும் அழுத்தினான். கைப்பிடியை இரு கைகளால் பிடித்துக் கொண்டான் அவனுக்கு அவனே ஓட்டுவது போல நினைத்துப் பார்த்து மகிழ்ச்சியடைந்தான்.




மாமா பாலாவிடம் அங்கே பாரு விமானம் ஸ்ஸ்ஸ்ஸைன்ங்.. னு பறக்கிறது என்று கூறினார்.

தாத்தாவின் வீட்டில் இறங்கினான். கட கட, டக் டக், டுப் டுப் என்று சத்தமிட்டுக் கொண்டே இருந்தான். மேலும் தாத்தா பாட்டி அத்தை அனைவர் முதுகிலும் ஏறிக்கொண்டு கட கட, டக் டக், டுப் டுப் என்று சத்தமிட்டான்.



மறுநாள் காலை, தாத்தா பாலாவை அருகில் உள்ள புத்தகக் கடைக்கு மிதிவண்டியில் அழைத்துச் சென்றார்.




மிதிவண்டியின் டிரிங் டிரிங் ஒலி பாலாவுக்கு பனிக்கூழை நினைவுபடுத்தியது. செல்லும் வழியில் நீண்ட குச் குச் கூ கூ என்று ஒலி எழுப்பி தொடர்வண்டி குறுக்கிட்டது.



"கூச் கூச் வென!" வண்டி புறப்படுவதற்கு முன் பெரிய விசில் ஒலி எழுப்பியது. தொடர்ந்து சக்கரங்கள் தண்டவாளத்தில் ஓட ஆரம்பித்தன. "இதுதான் எல்லாவற்றிலும் பெரிய ஓசை!" என்று பாலா கண்களை அகல விரித்தான்.



வீட்டிக்கு வந்ததும் தாத்தா பரிசளித்த புத்தகத்தின் வாயிலாக மேலும் பல வண்டிகளையும் பயணம் செய்வதற்குத் தேவையான பல்வேறு வாகனங்களையும் பார்த்துத் தெரிந்து கொண்டான்.




சரக்குந்து
விமானம்
கப்பல்
மகிழுந்து
தீயணைப்பு வண்டி

ஒவ்வொரு வண்டியும் வித்தியாசமான வடிவத்தில் இருந்தன, வெவ்வேறு வேகத்தில் சென்றன. ஆனால் எல்லாவற்றிலும் முக்கியமானது, ஒவ்வொரு வண்டியும் ஒரு தனித்துவமான ஒலியை எழுப்பி பாலாவை பத்திரமாகக் கூட்டிச் சென்றன.





"இது ஒரு அற்புதமான ஓசைகள் நிறைந்த பயணம்!" என்று மகிழ்ச்சியுடன் தாத்தாவைக் கட்டிக் கொண்டான்.



## உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com